# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
************

முறையீட்டு மனு எண்: 183/2016/பே1

ஆணை எண் 275/2017/ நாள் 14–12–2017

திரு. பி.செந்தில்குமார்,
2–வது வார்டு உறுப்பினர்,
காட்டுப்பாளையம்,
மொடக்குறிச்சி – 638 104. -- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மொடக்குறிச்சி பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம் – 638 104. -- எதிர் மனுதாரர்

## ஆணை

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சி, 2–வது வார்டு உறுப்பினர் திரு. பி. செந்தில்குமார், என்பவரின் 09.03.2016 ம் நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 15.03.2016 அன்று பெறப்பட்டு 0183/16 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு. பி. செந்தில் குமார், முறையீட்டு மனுதாரர், தனது மனுவில் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி கிராமம் (கிராம எண். 62) மொடக்குறிச்சியில் இருந்து கணபதிபாளையம் செல்லும் சாலையில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மேல்புறம் செலம்பகவுண்டன்பாளையம், பேரூராட்சி தார்ச்சாலை தென் வடலாக செல்வதாகவும், இச்சாலையினை கடந்த 08.11.2012ம் தேதியன்று மொடக்குறிச்சி பேரூராட்சி மன்ற தீர்மான எண்.3 வரிசை எண். 1 ல் ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலை அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி நிர்வாக அனுமதியின்பேரில் 3 வருடங்களுக்கு முன்னர் பேரூராட்சி செலவில் தார்ச்சாலை அமைக்கப்பட்டதாகவும்

தெரிவித்துள்ளார். மேற்படி தார்ச்சாலைக்கு மேல்புறம் ஆண்டிப்பண்டார சமூகத்தினரின் மயானமும், அதை ஒட்டிய சாக்கடையும், ஓடைபுறம்போக்கு இடமும், உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். நல்ல நிலையில் இருந்த சாலையினை கடந்த சில நாட்களுக்கு முன்னர் எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் தமிழக அரசு வருவாய்த்துறை நில உரிமை விவரங்கள் அடங்கிய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள வரிசை எண். 6 மற்றும் 7ல் உள்ள திரு. அருணாச்சலம் மகன் திரு. கிருஷ்ணமூர்த்தி, மற்றும் திரு. ஆறுமுகம் மகன் திரு. கார்த்தி ஆகியோர் மேற்படி தார்ச்சாலையை அழித்துவிட்டு தன்னிச்சையாக தாங்கள் வாங்கிய விவசாய பூமியை வீட்டு மனைகளாக பிரித்து ஆதாயம் தேடுவதற்காக தற்போது மண்சாலையாக போட்டுள்ளனர் எனவும், மேலும் யாருடைய அனுமதியும் பெறாமல் மேற்படி இடத்தில் தென்வடலாக சுவர் அமைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் திரு. கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு. கார்த்தி ஆகியோர் மொடக்குறிச்சி ஆ கிராமம் பட்டா எண். **1587 ல் சர்வே எண். 584/1ஏ** சுமார் **4–18–00** ஹெக்டேர் விவசாய நில பூமியை வீட்டு மனைகளாக பிரித்து எவ்வித அரசு அங்கீகாரமும் இல்லாமலும் அதற்கான அனுமதி பெறாமலும் பொதுமக்களை ஏமாற்றி காலி வீட்டுமனைகளாக விற்று வருகிறார்கள் எனவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக மொடக்குறிச்சி பேரூராட்சி அலுவலரிடமும், மன்றக் கூட்டங்களில் சொல்லியும் இது குறித்து யாரும் பொருட்படுத்தவில்லை எனவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார். பேரூராட்சி செயல் அலுவலரிடம் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார்.

மேலும் விவசாய பூமியை வீட்டு மனைகளாக பிரிக்க வருவாய்த் துறையினரிடம் தடையின்மை சான்று பெறவேண்டிய நடைமுறையினையும் பின்பற்றாமல் மனைப்பிரிவு அமைத்ததையும், நிலையாக இருந்த மொடக்குறிச்சி பேரூராட்சி தார்ச்சாலையினை மண் சாலையாக மாற்றிய விவரத்தினை ஆராய்ந்தும், ஓடை புறம்போக்கில் சுவர் அமைத்துள்ளதையும் பார்வையிட்டு அனைத்து சம்பவங்களையும் நிறுத்தி வைக்கவும், அனுமதியின்றி பேரூராட்சியால் போடப்பட்ட ரூ.4.00 லட்சம் மதிப்பிலான தார்ச்சாலையினை அழித்த நபர்கள் மீது நடவடிக்கை கோரியும் தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண். 183/2016/பே/நாள்:18.03.2016,ல் மொடக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்கம் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது. பேரூராட்சி செயல் அலுவலர், மொடக்குறிச்சி தனது அறிக்கை ந.க.எண். 106/2015/நாள்: 25.07.2016 ல் விளக்கத்தினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

மொடக்குறிச்சி– கணபதி பாளையம் செல்லும் சாலை முதல் செலம்பகவுண்டன்பாளையம் வரை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வழியாக செல்லும் தார்ச்சாலையின் இருபுறமும் முட்புதர்கள் அடர்ந்து வளர்ந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதை அகற்றி கொடுக்க பேரூராட்சி 8வது வார்டு உறுப்பினர் கடிதம் அளித்துள்ளார் என்றும்,. இப்பணியினை நிறைவேற்ற மொடக்குறிச்சி பேரூராட்சி தீர்மானம் எண். 254/2015 நாள்:16.09.2015ல் தீர்மானம் நிறைவேற்றியதாகவும் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர், மொடக்குறிச்சி அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சாலையின் ஓரத்தில் கோழிக்கழிவுகள் கொட்டப்படுவதால் ஏற்படும் துர்நாற்றம் மற்றும் முட்புதர்களை அகற்றி கொடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் அதன் அடிப்படையில்

பேரூராட்சி துணைத் தலைவரின் 22.02.2016ம் தேதிய முன் அனுமதியின்படி இப்பணிகள் செய்யப்பட்டதாகவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி சாலையின் அருகில் மொடக்குறிச்சி கிராம பட்டா எண். 1587 (ரீ.ச.எண். 284/1ஏ) என்ற இடத்தில் புதிதாக மனைப்பிரிவுகள் அமைக்க திரு. அ. கிருஷ்ணமூர்த்தி, த/பெ அருணாச்சல கவுண்டர் 352, பெரியசெட்டிபாளையம், 46 புதூர், ஈரோடு அவர்களிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பத்தினை ஏற்று பேரூராட்சி தீர்மான எண். 284/2015, நாள்:23.11.2015ன்படி சேலம் நகர் ஊரமைப்பு துறையின் அனுமதி பெற்று மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கலாம் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து ஸ்ரீ கரியகாளியம்மன்கோவில், மொடக்குறிச்சியின் தர்மகர்த்தா, அவர்களின் கடிதத்தில் மேற்படி மனைப்பிரிவிற்கு அருகில் உள்ள இந்து ஆண்டிப்பண்டாரம் சமூகத்தின் மயானத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்க அனுமதி கோரியுள்ளதாகவும் தனது கடிதத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மனைப்பிரிவு அங்கீகரிக்க கோரியுள்ள இடத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதா என்று வருவாய் வட்டாட்சியர் அவர்களுக்கு கடித எண்.3/2016 நாள்:28.03.2016ல் கடிதம் எழுதி மேற்படி இடத்தினை அளந்து கொடுக்க கோரியதுடன் அதற்கான தொகை ரூ.400/– செலான் எண். 6365 நாள்:23.03.2016ன் படி செலுத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். வருவாய் வட்டாட்சியரின் கடித எண்.212/2014/அ1/நாள்:17.06.2016ன்படி மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தில் 3 1/2 ஏக்கர் விவசாய நிலத்தினை வீட்டுமனைகளாக பிரித்து இருப்பதையும், அதன் அருகில் ஓடை புறம்போக்கில் சுற்றுச்சுவர் அமைந்துள்ளதையும் பேரூராட்சி செயல் அலுவலர் பார்வையிட்டு அவற்றினை நிறுத்தி வைக்க குறிப்பிட்டதாகவும் தெரிவித்துள்ளார். மொடக்குறிச்சி சாலையில் அனுமதியின்றி மண் கொட்டி ஆக்கிரமிப்பு செய்ய முற்படுவதை தடுத்து நிறுத்தக் கோரி காவல் துறைக்கு ந.க.எண். 105/2015/நாள்: 11.03.2016ல் கடிதம் எழுதியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மொடக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலரால் அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளை வாங்கி ஏமாறவேண்டாம் என விளம்பர பலகை வைக்கப்பட்டதாகவும் மற்றும் நாளிதழ்கள் மூலம் செய்தி வெளியிடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். அவ்வாறு வைக்கப்பட்ட விளம்பரப் பலகை அகற்றப்பட்டு வடிகாலில் தூக்கி எறியப்பட்டதாகவும், இந்த உண்மைகளுக்கு புறம்பாக முறையீட்டு மனுதாரர் செயல் அலுவலர் மீது தேவையற்ற காரணங்களினால் புகார் அளித்துள்ளதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ எண் 183/2016/பே.1/நாள் 24.12.2016ன்படி மேற்படி புகார் மனு தொடர்பாக முறையீட்டு மனுதாரர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலரின் நேரடி விளக்கங்களை பெற இம்முறைமன்ற நடுவத்தில் 02.02.2017 அன்று நேரில் ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டது.

திருமதி டார்த்தி, செயல் அலுவலர், மொடக்குறிச்சி பேரூராட்சி அவர்கள் 02.02.2017ம் தேதியன்று ஆஜராகி முறைமன்ற நடுவம் முன்பு கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

".......திரு. பி. செந்தில்குமாருடைய 09.03.2016ம் தேதிய மனு குறித்த விவரம் தனக்கு தெரியும் எனவும், விவசாய பூமிகளை வருவாய்த்துறையினரிடமும், மற்றவரிடமும் எந்த அனுமதியும் பெறாமல் வீட்டு மனைகளாக பிரிக்கின்ற சம்பவம் நடைபெறுகிறது எனவும் சுமார் ரூ.4.00 லட்சம் செலவில் சுவர் அமைத்துள்ளது எனவும் திரு. கிருஷ்ணமூர்த்தி மற்றும்

திரு.கார்த்தி ஆகியோர் மொடக்குறிச்சி கிராம பட்டா எண். 1587 சர்வே எண். 524/1ஏ நிலப்பரப்பு 4-18-00 ஹெக்டேர் அளவுக்கான நிலங்களை சேலம் நகர் ஊரமைப்புத்துறையின் அனுமதி பெறாமல் விளை நிலங்களை மனைகளாக பிரித்து பொதுமக்களை ஏமாற்றி விற்று வருகிறார்கள் எனவும், ரூ. 4.00 லட்சம் செலவில் பேரூராட்சியால் போடப்பட்ட தார்ச்சாலையினை கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் மனுவில் குறிப்பிட்டிருந்த இடம் தெரியாமலும் தடம் தெரியாமலும் பழுதடைந்துவிட்டது எனவும் தெரிவித்துள்ளார். தான் பேரூராட்சியின் செயல் அலுவலர் என்ற முறையில் அங்கீகாரம் இல்லாத வீட்டு மனைகளை வாங்கவேண்டாம் என அறிவுறுத்தியதாகவும், தகவல் அறிவிப்பு பலகையும் மற்றும் செய்திதாள்கள் மூலமும் மொடக்குறிச்சி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியதாகவும் தனது நேரடி வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்

திரு. பி.செந்தில்குமார் 2வது வார்டு உறுப்பினர் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு ஆஜராகி 02.02.2017ல் கீழ்கண்டாறு தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

".......தான் மொடக்குறிச்சி பேரூராட்சியின் 2வது வார்டு உறுப்பினராக இருந்ததாகவும், 09.03.2016 ம் தேதிய புகார் மனு தன்னால் அனுப்பப்பட்டது எனவும், புகார் மனு அனுப்பிய காலத்தில் செயல் அலுவலராக திருமதி.டார்த்தி மற்றும் துணைத் தலைவர் திருமதி தமிழ்ச்செல்வி ரவி ஆகியோர் பணிபுரிந்ததாகவும் தெரிவித்துள்ளார். மொடக்குறிச்சியில் இருந்து செலம்பகவுண்டன்பாளையம் செல்லும் சாலையின் தார்ச்சாலை தென் வடக்காக செல்வதாகவும், இந்த தார்ச்சாலை கடந்த 08.11.2012 அன்று அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளிக்கு மேற்புறம் அமைக்க பேரூராட்சியால் மன்றத் தீர்மானம் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதன் அருகே ஒரு சமூகத்தினர் மயானமும் அதை ஒட்டி சாக்கடையும் ஓடை புறம்போக்கு நிலமும் உள்ளதாகவும், தனது வாக்கு மூலத்தில் பதிவு செய்துள்ளார். மேலும் நல்ல நிலையில், பயன்பாட்டில் இருந்த தார்ச்சாலையினை எவ்வித அனுமதியும் இன்றி திரு. கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு. ஆறுமுகன் மகன் திரு. கார்த்தி ஆகியோர் தார்ச்சாலையை அழித்துவிட்டு அங்கு வீட்டுமனைகளாக பிரித்து தற்பொழுது மண் சாலைகளாக போட்டுள்ளதாகவும், இந்த விவசாய பூமியை அரசு அங்கீகாரம் இல்லாமல், அனுமதி பெறாமல் பொதுமக்களை ஏமாற்றி விற்று வருவதாகவும், இது சம்பந்தமாக பேரூராட்சி செயல் அலுவலரிடம் இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு மனு கொடுத்தாகவும், அப்போது பேரூராட்சி தலைவர் பதவி காலியாக இருந்ததால் இதற்கு செயல் அலுவலரும், துணைத் தலைவரும் பொறுப்பு எனவும், அனுமதி இல்லாமல் ஏற்கனவே ரூ. 4.00 லட்சம் செலவில் போட்டுள்ள தார்ச்சாலையை அழித்தவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதாகவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

15.03.2016 அன்று பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் தல ஆய்வு செய்ததாகவும், தனது புகாரின் அடிப்படையில் செயல் அலுவலரிடம் அதற்கான விளக்கம் பெற்றரா? என்ற விவரம் தனக்கு தெரியவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். 23.03.2016 அன்று பேரூராட்சி செயல் அலுவலர், மொடக்குறிச்சி காவல் நிலையத்தில் ஒரு புகார் அளித்ததாகவும், அந்த புகாரில், தனியார் மேற்படி தார் சாலையை அழித்தவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெரிவித்துள்ளார் எனவும் ஆனால் மேற்படி புகார் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை எனவும், மாறாக மற்றவர்களுக்கு போய் சேர்ந்துள்ளது எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். இது குறித்து 23.03.2016 ல் துணைத்தலைவர் பத்திரிக்கைக்கு பேட்டி அளித்தார்

எனவும், அதில் மேற்படி புகாரில் எந்த உண்மையும் இல்லை என தெரிவித்துள்ளதாக தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். ஆனால் செயல் அலுவலர் தனது அனுமதியின்றி தார்ச்சாலையை அழித்துவிட்டனர் என அன்றே காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளதாகவும், இதற்கான மன்றப் பொருளும் 07.06.2016 ல் வைக்கப்பட்டு அனுமதியும் பெற்றதாகவும் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார். தனியார் மூலமாக சுமார் 4 எக்கர் நிலத்தினை எவ்வித அனுதியுமின்றி மனைப்பிரிவுகள் அமைத்து, அதற்காக ஏக்கருக்கு ரூ. 5 லட்சம் முதல் கணக்கிட்டு இதனை உரிமையாளரிடம் பெற்றுக் கொண்டு, துணைத் தலைவர் மற்றும் கவுன்சிலர், திரு. செந்தில்குமார் தவிர, அனைவரும் பங்கிட்டுக் கொண்டதாகவும், மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவு இடத்திற்கான சாலையினை பேரூராட்சிக்கு தானமாக பெற்றுக் கொண்டார்கள் எனவும், அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவிற்கு சாலைகளை தானமாக பெற்றது தவறு எனவும் தெரிவித்துள்ளார். மேலும் பொது பயன்பாட்டிற்கென 10% இடம் மேற்படி மனைப்பிரிவில் பெறப்படவேண்டும் எனவும் அதற்கு பதில் அதற்கான பணத்தினை கையூட்டாக வழங்கி விடுகிறார்கள் எனவும், இது குறித்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு அவர்களிடம் 13.04.2016 மற்றும் 19.07.2016 ஆகிய தேதிகளில் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் விவரங்கள் கோரியதாகவும், ஆனால் இதுவரை பதில் வரப்பெறவில்லை என்பதால் மீண்டும் அவருக்கே மேல்முறையீடு செய்துள்ளதாகவும் அதற்கும் பதில் வரவில்லை எனவும், பேரூராட்சி தார்ச்சாலையினை அழித்தவர்கள் மீது உரிய நடவடிக்கை மற்றும் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கியதற்கும் உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறும் தனது வாக்கு மூலத்தில் பதிவு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண். 183/2016 நாள்: 04.08.2017 ன் மூலம் மேற்படி புகார் குறித்து உரிய தல ஆய்வு மேற்கொண்டு தனது அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் சட்டம் 2014 விதி 6 (4 (b) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

ஈரோடு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், அவர்களின் கடித எண். 4979/2017/ப.3/நாள்:06.11.2017ன்படி தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

மொடக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி முதல் செலம்பகவுண்டன்பாளையம் வரை செல்லும் தார்ச்சாலையானது கடந்த 04.11.2015ம் ஆண்டு பெய்த வடகிழக்கு பருவ மழையின்போது சேதமடைந்ததாகவும் இந்த சாலையினை செப்பனிட நிதி ஒதுக்கீடு கோரி செயல் அலுவலரால் முன் மொழிவுகள் மாவட்ட ஆட்சியருக்கு சமர்ப்பிக்கப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மொடக்குறிச்சி பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண் 254/2015, நாள் 16.09.2015 ல் தார்ச்சாலையின் இருபுறமும் அடர்ந்து வளர்ந்துள்ள முட்புதர்களை அகற்றிக் கொடுக்க 8வது வார்டு உறுப்பினரால் கேட்கப்பட்டுள்ளதை மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். ஆனால் பேரூராட்சி மூலம் தார்ச்சாலை செப்பனிடும் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் முட்புதர்கள் பேரூராட்சி பணியாளர்களைக் கொண்டு அகற்றப்பட்டது தல ஆய்வில் கண்டறியப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆண்டிப்பண்டாரம் சமூகத்திற்கான மயானத்திற்கு தேவையான இடத்தினை வருவாய்த்துறையினரால் அளந்து கொடுக்கப்பட்டதின் அடிப்படையில் மேற்படி இனத்தவர்கள்

தங்கள் சொந்த செலவில் சுற்றுச் சுவர் அமைத்துக் கொண்டதாகவும், இச்சுவரும் பேரூராட்சி சாலையில் இருந்து 3 மீட்டர் தொலைவு தள்ளி அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை எனவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மொடக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண்.106/2015, நாள்.11.06.2016ன் படி திரு கிருஷ்ணமூர்த்தி த/பெ திரு அருணாசலம் என்பவர் மீது மொடக்குறிச்சி காவல் நிலையத்தில் பேரூராட்சியின் அனுமதி இல்லாமல் தார்ச்சாலை அமைக்க முயல்வதை தடுத்து நிறுத்த புகார் அளிக்கப்பட்டதாகவும், புகார் அளிக்கப்பட்ட விவரம் மொடக்குறிச்சி பேரூராட்சிக் கோப்பில் உள்ள விவரம் பார்க்கப்பட்டதாகவும், ஈரோடு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சேதமடைந்த சாலையினை பொது நலன் கருதி செப்பனிட்டு தருவதாக பேரூராட்சி அலுவலக பணியாளர்களால் தெரிவிக்கப்பட்டதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

மேற்படி சாலையின் அருகில் அமைக்கப்பட்ட மனைப்பிரிவினை முறைப்படுத்தும் பொருட்டு இம்மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள பொது தடங்கள், சாலைகள் மற்றும் பொது திறவிடங்களை ஒப்படைப்பு செய்யக் கோரி நில உரிமையாளருக்கு செயல் அலுவலர், மொடக்குறிச்சி அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவ்வாறு ஒப்படைக்கப்பட்டபின்னர், சேலம் மண்டல நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர் அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி பெற்று பேரூராட்சியின் மூலம் இறுதி அங்கீகாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நில உரிமையாளருக்கு கடிதம் மொடக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலரால் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் புகார், மொடக்குறிச்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலரின் நேரடி விளக்கங்கள் இவற்றின் அடிப்படையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு அளித்துள்ள தல ஆய்வு அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

பேரூராட்சி மூலம் அமைக்கப்பட்ட மொடக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி முதல் செலம்ப கவுண்டன் பாளையம் வரை செல்லும் சாலை 04.11.2015 ல் பெய்த மழையின் மூலம் சேதமடைந்ததாகவும், சாலையினை செப்பனிட நிதி ஒதுக்கீடு கோரி செயல் அலுவலரால் முன் மொழிவுகள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டதாகவும், ஆனால் பேரூராட்சி மூலம் தார்ச்சாலை செப்பனிடப்படவில்லை எனவும், முட்புதர்கள் பேரூராட்சி பணியாளர்களைக் கொண்டு அகற்றப்பட்டது எனவும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் இச்சாலையினை சேதப்படுத்தியதாக தெரிவிக்கப்படும் திரு கிருஷ்ணமூர்த்தி த/பெ திரு அருணசலம் என்பவர் மீது பேரூராட்சி செயல் அலுவலரால் காவல் துறையில் புகார் செய்யப்பட்ட விவரத்தினையும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். இச்சாலைக்கு அருகில் உள்ள ஆண்டிப்பண்டாரம் இனத்தவருக்கு சொந்தமான மயான பகுதியும் வருவாய்த்துறையினரால் அளந்து கொடுக்கப்பட்ட பின்னர் மேற்படி சமுதாயத்தினரால் தடுப்பு சுற்றுச் சுவர்

கட்டப்பட்டுள்ளதாகவும் இதுவும் பேரூராட்சி சாலையில் இருந்து 3 மீட்டர் தள்ளி அமைந்துள்ளதாகவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சாலைக்கு அருகில் அமைந்துள்ள மனைப்பிரிவின் சாலைகள் மற்றும் பிற திறவிடங்களை ஒப்படைக்கக் கோரி உரிமையாளருக்கு கடிதம் எழுதியுள்ளதாகவும், மேற்படி இடங்கள் ஒப்படைத்த பின்னர் மேற்படி மனைப்பிரிவு முறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது ஆய்வு அறிக்கையில் தெரிவித்துள்ளதோடல்லாமல் இப்பணிகளை சரிவர கவனிக்கத் தவறிய முன்னாள் செயல் அலுவலர் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவத்துள்ள விவரத்தினையும் இம்முறைமன்ற நடுவம் பரிசீலித்தது.

இது போன்று பேரூராட்சியின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்கள்/முயற்சிப்பவர்கள் மீது உடனுக்குடன் கடும் நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் மிக விழிப்புடன் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டிடவும் தொடர்ந்து நடவடிக்கைகளை கண்காணிக்கவும் செயல் அலுவலருக்கு வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடன் ஆணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்

1. திரு. பி.செந்தில்குமார்,
 2–வது வார்டு உறுப்பினர்,
 காட்டுப்பாளையம்,
 மொடக்குறிச்சி – 638 104.

2. செயல் அலுவலர்,
 மொடக்குறிச்சி பேரூராட்சி,
 ஈரோடு மாவட்டம்.

3. பேரூராட்சிகள் உதவி இயக்குனர்,
 ஈரோடு மண்டலம்.

4. பேரூராட்சிகளின் இயக்குநர்,
 குறளகம்,
 சென்னை